**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Multifaceted Perspectives in Tamil Literature

**Dr. M. Kamaraj***

*Assistant Professor, Department of Tamil Literature, Nallamuthu Gounder Mahalingam College (NGM College), Pollachi – 642 001*

*Correspondence: kamaraj301@gmail.com, Tel: +91*9952356301*

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** In this vast and expansive world, Tamil literatures hold a position of supreme distinction. They encompass such multifaceted perspectives that it can be said there is no subject matter that does not exist within them. It is an added strength that Tamil literatures serve as the primary foundation and pioneer for global cultural elements. Although numerous perspectives hold a place of pride in our grand literatures, the purpose of this article is to examine them through the lenses of virtue (Aram), philosophy, society, politics, law, education, and economics.

Furthermore, this study seeks to demonstrate how these ancient frameworks are not merely relics of the past but are living doctrines that offer profound solutions to contemporary global challenges. By dissecting the socio-political structures found in works like the Purananuru and the ethical imperatives of the Thirukkural, we uncover a sophisticated blueprint for sustainable governance and social equity. This research will argue that the integration of classical Tamil thought into modern academic and policy-making discourses can provide a more holistic understanding of human progress. Ultimately, this exploration serves as a bridge, connecting the timeless wisdom of the Sangam and Post-Sangam eras to the complexities of our current interconnected world, reaffirming that the roots of global civilization are deeply intertwined with the Tamil literary tradition.

**Keywords:** Virtue (Aram), philosophy, society, politics, law, education, economics Changes.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# தமிழிலக்கியங்களில் பன்முகப் பார்வை

**முனைவர் மு. காமராஜ்,** உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி – 642 001

**முன்னுரை:**

பரந்து விரிந்த உலகத்தில் மாபெரும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது தமிழ் இலக்கியங்களேயாகும். இவ்விலக்கியங்களில் இல்லாத பொருள் எவையும் இல்லை என்று சொல்லும் அளவிற்குப் பன்முக நோக்குகள் இதனுள் தன்னகத்தே கொண்டு இயங்குகின்றன. உலகப் பண்பாட்டுக் கூறுகளுக்கெல்லாம் முதன்மையானதாகவும் முன்னோடியாகவும் தமிழ் இலக்கியங்கள் அமைந்திருப்பது கூடுதல் பலனாகும். தமிழ் பேரிலக்கியங்களில் எத்தனையோ நோக்குநிலைகள் சிறப்பிடம் பெற்றிருந்தாலும் இந்தக் கட்டுரையின் வாயிலாக அறம், தத்துவம், சமூகம், அரசியல் , சட்டம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றினைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழிலக்கியத்தில் அறம்:**

தமிழர் பொருளீட்டி அறம் செய்து இன்புற்றனர். இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர். சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக்கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம். சங்ககால அறங்கள் மனிதர்கள் அனைவரும் பொதுவிதியான “அறத்தை” ஏற்க வேண்டும். காதல், போர், நிதி, நீதி, கல்வி, தர்மம், நன்னெறி உள்ளிட்ட பன்முகப் பார்வையில் அறங்கள் விளங்கின. சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அக்கால அறங்கள் சமயம் இயல்பானவை, சமயச் சார்பற்றவை என்று சொல்வது சாலச் சிறந்ததாகும்.

**தமிழிலக்கியத்தில் தத்துவம்:**

தமிழிலக்கியத்தில் தத்துவச் சிந்தனைகள் மேலோங்கிருப்பதை நாம் அனைவரும் அறிந்திருப்போம். வெட்ட வெளியில் காற்றினை உணவாக உட்கொண்டு இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிராத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோகங்களைப் பெற்றவர்கள் சித்தர்கள் என அழைக்கப்படுகின்றனர். மேலும் சித்தர்கள் உடற்கூறு தத்துவங்களை உணர்ந்து பற்றற்ற வாழ்க்கையை மேற்கொள்ள எல்லா தத்துவங்களையும் ஒரே நிலையில் கையாளுவர். உடற்கூறுகள் அனைத்தையும் சரிவர செயல்படுத்தினால்தான் பற்றற்ற வாழ்வை

https://doi.org/10.63300/kijts04052026

மேற்கொள்ள முடியும். எனவே, தத்துவ நெறியில் ஒரு மனிதன் செயல்பட வேண்டுமானால் அனுபவம் வாய்ந்த சித்தர்கள் வழியைப் பின்பற்றுதல் அவசியம்.

சித்தர்கள் வாழ்விற்குத் தேவையான நெறிமுறைகளை அதிகப் பாடல்களில் கூறியுள்ளபோதிலும் தத்துவம் நிறைந்தக் கருத்துக்களைத் திருமந்திரத்திலும், பட்டினத்தார், சிவவாக்கியார் பாடல்களிலும் காணலாம். மனித மாண்புகளை மிக அழகாகவும், துல்லியமாகவும் உலகிற்கு உணர்த்தியவர்கள் சித்தர்கள். மக்களோடு மக்களாய் வாழ்ந்து, மானுட வாழ்வியல் நெறிகளில் ஊறித்திளைத்தனர். அன்பையும், அருளையும் போற்றினர். அத்துடன் யோகம், ஞானம் ஆகியவற்றின் வழி இறைவனுடன் இரண்டறக்கலக்கும் தவ வலிமை பெற்றிருந்தனர். சித்தர்கள் மனித உணர்வுகளும் ஆற்றலும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒருமித்த சிந்தனைகள் வளர வேண்டுமென எண்ணியவர்கள். தம் சிந்தனைகளை சமயம் மற்றும் சமுதாயக் கோட்பாடுகளாக வடிவமைத்து நெறிமுறைகளை அறிவுறுத்தினர். சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் விட்டொழித்துச்ள சிற்றின்ப ஆசைகளைத் துறந்து, நிலையாமையை வலியுறுத்தினர்.

**"சினம் அடங்கக் கற்றாலும்**
**சித்தியெல்லாம் பெற்றாலும்**
**மனம் அடங்கக் கல்லார்க்கு**
**வாயேன் பராபரமே"** - என்று தாயுமானவர் கூறுகின்றார். மேற்குறித்த அடியில் அறிவு நிரம்பப்பெற்று, கோபத்தை அடக்கும் ஆற்றலையும் பெற்று வாழும் மனிதர்களில் மனதை அடக்க தெரியாதோர்க்கு இறையருள் கிட்டாது என்னும் உண்மை வெளிப்படுகிறது.

**தமிழிலக்கியங்களில் சமூகம்:**

சங்க இலக்கியங்கள், சங்க காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கை, கொள்கை ஆகியவற்றை விவரிக்கின்றன. சங்ககாலத்தில் நிலமும் பொழுதும்தான் முக்கியப் பொருளாக இருந்தது. சங்க இலக்கியங்களின் துணைக்கொண்டு சமூக அமைப்பு, சமுதாய உரிப்பொருள் அமைப்பு ஆகியவற்றை சமூகவியல் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அதுமட்டுமின்றி வாழ்வின் பல்வேறு கூறுகளையும் இயம்புகின்றன. மனிதக் குழுவின் கூட்டுத்தொகுதிதான் சமுதாயம். பல்வேறு தன்மைகள், சமுதாய உணர்ச்சிகள் ஆகியவை சமுதாயத்தின் பண்புகளாக மலர்ச்சி பெறுகின்றன. ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் பண்பட்ட நிலையில் கொண்டிருக்கிற இணக்கமான உறவுமுறையை ஊர், குடும்பம், கூட்டு வாழ்வியல், தனிநபர் வாழ்வியல், தொழில் , பொழுதுபோக்கு, மேற்கொள்ளும் கலாச்சார முறை, பழக்க வழக்கங்கள், மரபு வழி பின்பற்றல் ,விருந்தோம்பல், குடியிருப்பு முறை , நாகரிகம், கல்வி நிலை, பெண்கள் முன்னேற்றம், பொருளாதார

நிலைப்பாடு, வறுமை, உணர்வுகள் போன்ற எண்ணற்ற கூறுகளை உள்ளடக்கித் தமிழ்ப் பேரிலக்கியங்கள் பலவாறாகத் தத்தம் கருத்துகளை விவரித்த வண்ணமே உள்ளன.

**தமிழிலக்கியத்தில் அரசியல்:**

சங்க காலத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று பேரரசர்கள் இருந்தனர். இம்மூவருக்குள்ளே ஆதிக்கப் போட்டிகளும் போர்களும் அடிக்கடி நடைபெற்று வந்தன. மூவேந்தர்களுள் வலிமை பெற்றவன் அவ்வப்போது பிற வேந்தர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தினான். கரிகால் சோழன் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும் அவனது ஆதிக்கத்தின் கீழ் வந்தது. சேரன் செங்குட்டுவன் காலத்தில் தமிழகத்தின் ஆட்சி அதிகாரம் அம்மன்னனிடம் இருந்தது. பாண்டியன் நெடுஞ்செழியன் பிற தமிழ் வேந்தர்களின் மேல் ஆதிக்கம் செலுத்தினான். மூவேந்தர்களே மட்டுமின்றிச் சில குறுநில மன்னர்களும் மலைகள் போன்ற இடத்தைப் பெற்று ஆட்சி செலுத்தி வந்தனர்.

அரியணை உரிமை பொதுவாக மன்னனின் மூத்த மகனுக்குக் கிடைத்தது. வாரிசு உரிமை என்பது சொத்து உரிமை போன்றே காணப்பட்டது. பெண்களுக்கு வாரிசு உரிமை இல்லை. மன்னன் அரசாட்சி செய்து கொண்டிருக்கும்போது வாரிசு இன்றி இறந்தால் மக்கள் யானையின் உதவியுடன் மன்னனைத் தேர்ந்தெடுத்தனர். மன்னனுக்கு அவை (அரசவை) இருந்தது. அவ்வவையில் அரசுப் பணிகள் செய்யப்பட்டன. மன்னனே அவைக்குத் தலைவனாக இருந்தான். அவையில் அரசனோடு அரசியும் வீற்றிருக்கும் வழக்கம் இருந்தது. இவர்களோடு அமைச்சர்களும், அரசு அலுவலர்களும், புலவர்களும், மன்னனின் நண்பர்களும் கலந்து உரையாடினர். வேந்தர்களுக்கு அவையிருப்பது போலக் குறுநில மன்னர்களுக்கும் அவை இருந்தது. பாரியின் அவையில் கபிலரும், அதிகமான் அவையில் ஔவையாரும், செங்குட்டுவன் அவையில் பரணரும் அமர்ந்திருந்தனர். அவையில் இலக்கியங்கள் பற்றி விவாதங்கள் நடைபெற்றன. அரசனுக்கு ஆலோசனை வழங்கி நல்லாட்சியை ஏற்படுத்துவதே அவை உறுப்பினர்களின் முக்கியப் பணியாகும். அவையோர் மன்னன் அறம் தவறிச் செயல்பட்டபோது அவனுக்கு அறவுரை கூறி அவனை நல்வழிப்படுத்தினர்.

**’அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்**

**திறனறிந்தான் தேர்ச்சித் துணை’ -** (திருக்குறள்,635)

இக்குறள், அரசன் அமைச்சர்களைத் தேர்ச்சித் துணையாகக் கொண்டான் என்பதைக் காட்டுகிறது. பொதுமக்கள் அளித்த மனுக்களைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நீதி வழங்குவதே அவையில் நடைபெற்ற முக்கியப் பணியாகும். அவ்வப்போது மன்னன் ஆணைகளைப் பிறப்பித்தான். அவ்வாணைகள் முரசு கொட்டி மக்களுக்கு அறிவிக்கப்பட்டன.

**’செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்**

**எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே'** (புறநானூறு - 54)

சேரனது தலைமை உடைய அவைக்களத்தின்கண் செம்மாந்து சென்று புகுதல் எம்மைப் போன்ற வாழ்க்கையை உடைய இரவலர்க்கு எளிது. அரசவையில் இசை முழங்கிக் கொண்டிருக்கும். இதற்குச் சான்று மலைபடுகடாமில் காணப்படுகிறது.

**இசை பெறு திருவின் வேத்தவை ஏற்ப**

**துறை பல முற்றிய பைதீர் பாணரொடு** (மலைபடுகடாம்: 39-40)

இசையை எக்காலமும் கேட்கின்ற செல்வத்தினை உடைய அரசவை இருந்ததற்கான குறிப்புகள் உள்ளன.

**தமிழிலக்கியத்தில் சட்டம்:**

சங்க இலக்கியங்களிலிருந்து சட்டக் கூறுகளின் பரிணாம வளர்ச்சியைக் காணலாம், 'நீதிபரிபாலனமுறைக்கு முகவுரை எழுதியவர்கள் தமிழர்களே. தமிழில் தொல்காப்பியம், பதினெண் மேல்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என 41 செவ்வியல் நூல்கள் உள்ளன. நீதி, நியாயம் சொற்களுக்கு முன்பே அறம், முறைமை சொற்கள் 'நான்மணிக்கடிகை'யில் உள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மறு பரிசீலனை மனுவை சிலப்பதிகாரத்தில் கொண்டுவந்தவர் கண்ணகி. சிபி சக்கரவர்த்தி, மனுநீதிச்சோழனை வழக்காடுவதற்கு முன்னுதாரணம் காட்டியவர் கண்ணகி. தமிழ் இலக்கியம் மாபெரும் கடல். அதில் சட்டம், மருத்துவம், ஆன்மிகம், நாத்திகம், மனிதன், மரம், விலங்கு என எதைத் தேடினாலும் கிடைக்கும். 18, 19 ம் நூற்றாண்டுகளில் மட்டுமின்றி 5000 ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியம் தோன்றியதிலிருந்து இலக்கியங்களில் சட்டக் கூறுகளுடைய பரிணாம வளர்ச்சியைக் காணலாம்,

**தமிழிலக்கியத்தில் கல்வி:**

தமிழ் இலக்கியத்தில் கல்விநிலை குறித்து பல குறிப்புகள் உள்ளன. சங்க இலக்கியம், நாலடியார், தொல்காப்பியம் ஆகியவற்றில் கல்வி குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. நாலடியார், "மிகுதியான நூல்களை ஆண்கள் சேகரித்து படிப்பது அவர்கள் வீடு முழுக்க ஒலித்தது" எனக் குறிப்பிடுகிறது. அறிவியல், கணிதம், பொறியியல், வானியல், தர்க்கம், நெறிமுறைகள் போன்றவற்றைப் பழந்தமிழர் படித்தனர். தொல்காப்பியம் கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வது ஓதற் பிரிவு என தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. அப்பர், தேவாரத்தில் "கல்வியில் கரைகண்ட சான்றோர் வாழும் காஞ்சி நகர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**தமிழிலக்கியத்தில் பொருளாதாரம்:**

நாடு வளம் பெற்று இருக்க வேண்டும் என்றால் அந்நாட்டின் பொருளாதாரம் செழிப்பாக இருத்தல் அவசியமாகிறது. நாடு வளம் பெறுவதற்குப் பல விதமான தொழில்கள் சிறப்புடன்

நடைபெறுதல் அவசியம். சங்க காலத்தில் விவசாயம் மிக முக்கியத் தொழிலாக விளங்கியது. இதனுடன் நெசவுத்தொழில், கால்நடை வளர்த்தல், மட்பாண்டத் தொழில், மீன் பிடித்தல், தோல் வேலை, முத்துக் குளித்தல், உள்நாட்டு வாணிபம், அயல்நாட்டு வாணிபம் போன்ற தொழில்களும் சிறப்புற்று விளங்கின.

**முடிவுரை:**

இன்றைய நவநாகரீக உலகில் தமிழ்ச் சமுதாயம் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுத் திகழ்கிறது. காலச்சுழற்சியில் தமிழ் இலக்கியங்களுடைய நோக்குத்தன்மை என்பது மேலும் மேலும் விரிந்து கொண்டே செல்கிறது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பன்முகநோக்குகள் ஆலம்விழுதுகள் போல் விரிந்து அகிலமெங்கும் பரவிவருவனவாக இருக்கின்றன என்பதனை அறியமுடிகிறது. கணினியுகத்தில் இன்னும் பல நோக்குநிலைகளைக்கண்டு தெளிந்து மிகப்பெரிய வளர்ச்சியினைத் தமிழ்ச்சமுதாயம் அடையவிருக்கிறது என்பது உறுதி!

**துணைநூற்பட்டியல் :**

[1]. சங்ககால வாழ்வியல் – முனைவர் ந. சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக்ஸ்(பி)

[2]. அம்பத்தூர், சென்னை - 600098

[3]. தாயுமானவர் பாடல்கள் - பி.ரா. நடராசன் தெளிவுரை, உமா பதிப்பகம்,

[4]. ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்.

[5]. திருக்குறள் தெளிவுரை – புலியூர்க் கேசிகன் உரை, மகிழினி பதிப்பகம், சென்னை.

[6]. தொல்காப்பியம் – இளம்பூரணர் உரை, முல்லை நிலையம் தி.நகர், சென்னை –

**[7].** 600017**.**

[8]. நாலடியார் மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்காரத் தெரு, பாரிமுனை சென்னை- 600108.

[9]. நான்மணிக்கடிகை – மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்காரத் தெரு, பாரிமுனை சென்னை- 600108.

[10]. பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – கா. வாசுதேவன், தேவன் பதிப்பகம், திருநகர், திருச்சி- 620005.

[11]. புறநானூறு – சங்க வெளியீடு , நியூ செஞ்சுரி புக்ஸ்(பி) அம்பத்தூர், சென்னை – 600098.

[12]. மலைபடுகடாம் – சங்க வெளியீடு, நியூ செஞ்சுரி புக்ஸ்(பி) அம்பத்தூர், சென்னை – 600098.

**[13].** மூவர் தேவாரம் – திருநாவுக்கரசர் உரை, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்காரத் தெரு, பாரிமுனை சென்னை- 600108.